பாடநெறி வழிகாட்டி 2027

மாகாண கல்வி நிலையம்



கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

அட்டைப்பட கருத்தாக்கம்: அபிகேல் விக்ரமநாயக
அட்டைப்பட கலைப்படைப்பு: அகில வீரசிங்க

கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

பாடநெறி வழிகாட்டி 2027

மாகாண கல்வி நிலையம்

கிறிஸ்துவில் ஐக்கிய வாழ்வு

இறையியல் கல்வி என்பது ஒரு சமூக முயற்சியாகும்.

நமது ஆண்டவர் மிகப்பெரிய கட்டளையை எடுத்துரைத்தபோது, தேவனை நேசிப்பதோடு நமது அயலானையும் நேசிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் (மத்தேயு 22:36-40). எனவே, நமது இறையியல் நாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதை மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் ஒருவரோடொருவர் எவ்வாறு வாழ்கிறோம் என்பதையும் வடிவமைக்க வேண்டும்.

2027ஆம் ஆண்டிற்கான கொழும்பு இறையியல் கல்லூரியின் கருப்பொருள், நம்மையே மையமாக கொண்டு வாழ்வதற்கு அப்பால், மற்றவர்களை நம்மைவிட மேலானவர்களாக கருதவும், அவர்களுடைய வாழ்க்கையை வடிவமைக்கும் அவர்களுடைய வாழ்க்கை அனுபவங்களையும் சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்ளவும் நம்மை அழைக்கிறது.

2027ஆம் ஆண்டில் கொழும்பு இறையியல் கல்லூரியில் கல்வி கற்பதில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளும்போது, பின்வரும் கேள்விகளை தொடர்ந்து கேட்டுக்கொள்ளுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்: நான் கற்றுக்கொள்வது எவ்வாறு . . .

- எனது அயலானுடன் நான் கொண்டிருக்கும் உறவை வடிவமைக்கிறது?
- எனது திருச்சபை, குடும்பம், நட்புறவுகள், பணியிடம் மற்றும் பிற சமூகங்களில் நான் பங்கேற்கும் விதத்தை வடிவமைக்கிறது?
- தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்வது குறித்த எனது புரிதலை ஆழப்படுத்துகிறது?

நமது இறையியல் கல்வி, நம்மை சிறந்த இறையியல் மாணவர்களாக மட்டுமல்லாமல், தேவனுடைய மக்களாக ஒருவரோடொருவர் உண்மையுடனும் விசுவாசத்துடனும் வாழக்கூடியவர்களாக நாளுக்கு நாள் வளரச்செய்வதாக.

கொழும்பு இறையியல் கல்லூரியானது:
இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்
இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமை கொண்டது.
ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரம் கொண்டது.

தொடர்பு கொள்வதற்கான தகவல்

மாகாண கல்வி பாடநெறிகள் extensions@cts.lk

யாழ்ப்பாணம் +94 77 4372399
jaffna@cts.lk

வவுனியா +94 76 9466882
vavuniya@cts.lk

மட்டக்களப்பு +94 77 0422317
batticaloa@cts.lk

மாகாண கல்வி நிலையங்களின் முகாமையாளர்
திரு இரா. ஹரிஹரன் haran@cts.lk

கல்விப்பீடாதிபதி
அருட்திரு. ரவீன் கல்தேரா ravin@cts.lk

உள்ளடக்கம்

	பக்கம்
பொதுவான தகவல்கள்	4
நேர அட்டவணை	6–13
பாடநெறி விவரணம்	14–21
இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பல்வளாக பாடநெறி	21
பல்வளாக பாடநெறி	22
விரிவுரையாளர் விபரங்கள்	23–27
CTS கற்கைத்திட்டங்கள்	28
சிறுவர் ஊழிய களம்	29–30

பொதுவான தகவல்கள்

CTS பாடநெறிகள்:

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களில் ஒரு பாடநெறியானது 4 நாட்களை கொண்டதாக மாதத்திற்கு ஒரு தடவை நடைபெறும்.

கற்கை வழிமுறைகள்:

- **நேர்நிலை கற்றல்:** பாடநெறிகள் CTS மாகாண கல்வி நிலையங்களில் நடைபெறும்.
- **நிகழ்நிலை கற்றல்:** பாடநெறிகள் Zoom வழியாக நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயல்திறனுடைய இணைய வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **பல்வளாக பாடநெறி:** தொழில்நுட்ப உதவியுடன் CTS கல்வி நிலையங்களிலிருந்து நேர்நிலை கற்றலாக இப்பாடநெறியானது கற்பிக்கப்படும். இதன் மூலமாக வெவ்வேறு கல்வி நிலையங்களில் உள்ள மாணவர்கள் மெய்நிகர் வகுப்பறையில் ஒன்றிணைந்து கற்பதற்கு வழிவகுக்கிறது. இப்பாடநெறியானது வாரத்திற்கு ஒரு முறை நடைபெறும்.

பாடக்கட்டணம்:

தை முதல் ஒரு பாடத்திற்கு ரூபா 4,000/= அறவிடப்படும்.

* மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பாடநெறிக்கு பதிவு செய்யும் முறை:

முன்பக்கத்தில் உள்ள CTS மாகாண கல்வி நிலையங்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்களை தொடர்பு கொள்வதற்கூடாக பாடநெறிக்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

நேர அட்டவணை

2027

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு	இரத்தினபுரி
தை	**மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்** தை 5-8 யோகநாதன் பகீரதன் **பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்** தை 18-21 ஜேசன் செல்வராஜா	**புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்** தை 5-8 வனஜா ராஜ்குமார் **வேதாகம விளக்கவுரை** தை 18-21 இரா. ஹரிஹரன்	**கிறிஸ்தவ வரலாறு II** தை 5-8 நிரன்ஜலா சகாயரட்ணம் **வேதாகம இறையியல்** தை 18-21 ஜெயசீலன் ஜோயல் டிரோன்	**தலைமைத்துவம்** தை 18-21 சிவராஜசிங்கம் ஜெயராஜ்
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **ஆவிக்குரிய வரங்கள்** வியாழன் | பி.ப.3:00-பி.ப.5:30 | 12 வாரங்கள் | ஆரம்பம்: தை 7 காமினி ஜயந்த			
	இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி **பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்** செவ்வாய் மு.ப.9:00-மு.ப.12:30 12 வாரங்கள் ஆரம்பம்: தை 12 ஜூலியன் தேவதாசன்			

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு	இரத்தினபுரி
மாசி	**புதிய ஏற்பாட்டிற்கான பின்னணி** மாசி 9-12 மகேஸ்வரன் மாணிக்கராஜா **இலங்கை திருச்சபை வரலாறு** மாசி 23-26 நிரன்ஜலா சகாயரட்ணம்	**ரோமருக்கு எழுதிய நிருபம்** மாசி 16-19 இரா. ஹரிஹரன்	**தலைமைத்துவம்** மாசி 9-12 சந்ரசேகரம் ரொஷான் க்ளவன்ஸ்	**வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்** மாசி 16-19 ஜெயவீரசிங்கம் ஜேக்கப் சுகுணரூபன்
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **ஆவிக்குரிய வரங்கள்** வியாழன் | பி.ப.3:00-பி.ப.5:30 | 12 வாரங்கள் | ஆரம்பம்: தை 7 காமினி ஜயந்த			
	இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி **பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்** செவ்வாய் மு.ப.9:00-மு.ப.12:30 12 வாரங்கள் ஆரம்பம்: தை 12 ஜூலியன் தேவதாசன்			

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு	இரத்தினபுரி
பங்குனி	**கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்** பங்குனி 9-12 கிறிஸ்ரி பாலேந்திரன் **வேதாகமத்தை கற்கும் முறைகள்** பங்குனி 16-19 ம. தர்ஷன்	**கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்** பங்குனி 9-12 ஜெயசீலன் ஜோயல் டிரோன்	**திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்** பங்குனி 9-12 சிவராஜசிங்கம் ஜெயராஜ்	**வாலிபர் ஊழியம்** வைகாசி 9-12 அரிதாஸ் தேவானந்
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **ஆவிக்குரிய வரங்கள்** வியாழன் | பி.ப.3:00-பி.ப.5:30 | 12 வாரங்கள் | ஆரம்பம்: தை 7 காமினி ஜயந்த			
	இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி **பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்** செவ்வாய் மு.ப.9:00-மு.ப.12:30 12 வாரங்கள் ஆரம்பம்: தை 12 ஜூலியன் தேவதாசன்			

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறியை குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு	இரத்தினபுரி
சித்திரை	**திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்** **சித்திரை** 6-9 சிவராஜசிங்கம் ஜெயராஜ் **வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்** **சித்திரை** 27-30 காமினி ஜயந்த	**பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்** **சித்திரை** 6-9 ஜேசன் செல்வராஜா	**கிறிஸ்தவ வரலாறு III** **சித்திரை** 6-9 நிரன்ஜலா சகாயரட்ணம்	**உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்** **சித்திரை** 6-9 இரா. ஹரிஹரன்
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **ஆவிக்குரிய வரங்கள்** வியாழன் | பி.ப.3:00-பி.ப.5:30 | 12 வாரங்கள் | ஆரம்பம்: தை 7 காமினி ஜயந்த			
	இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பாடநெறி **பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்** செவ்வாய் மு.ப.9:00-மு.ப.12:30 12 வாரங்கள் ஆரம்பம்: தை 12 ஜூலியன் தேவதாசன்			

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறியை குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு
வைகாசி - ஆனி	**பிரதான மதங்கள்** வைகாசி 4-7 இரா. ஹரிஹரன் **கிறிஸ்தவ வரலாறு - I** **ஆனி** 1-4 ஜோன் பெனடிக்ட்	**மாற்கு சுவிசேஷம்** வைகாசி 11-14 சிவராஜசிங்கம் ஜெயராஜ் **பிரதான மதங்கள்** **ஆனி** 14-17 இரா. ஹரிஹரன்	**தேவனும் உலகமும்** வைகாசி 11-14 ஜெயசீலன் ஜோயல் டிரோன் **புதிய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல்** **ஆனி** 1-4 மகேஸ்வரன் மாணிக்கராஜா
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **திருமணத்திற்கு தயாராவோருக்கான உதவி ஆலோசனைகள்** வியாழன் பி.ப.3:00-பி.ப.5:30 12 வாரங்கள் ஆரம்பம்: சித்திரை 29 வி. கிறிஷாந்தி சந்ரசேகர்		

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு
ஆடி - ஆவணி	**பிரசங்க பயிற்சி** ஆடி 6-9 கிறிஸ்ரி பாலேந்திரன் **அப்போஸ்தலருடைய நடபடிகள்** **ஆவணி** 3-6 வனஜா ராஜ்குமார்	**துர்உபதேசங்கள்** ஆடி 20-23 தனராஜ் அஜேந்திரன் **வேதாகமத்தை கற்கும் முறைகள்** **ஆவணி** 3-6 காமினி ஜயந்த	**இறையியலுக்கான அறிமுகம்** ஆடி 20-23 இரா. ஹரிஹரன் **கிறிஸ்தவ வரலாறு - I** **ஆவணி** 10-13 குத்தீன் மனோகர்
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **திருமணத்திற்கு தயாராவோருக்கான உதவி ஆலோசனைகள்** வியாழன் பி.ப.3:00-பி.ப.5:30 12 வாரங்கள் ஆரம்பம்: சித்திரை 29 வி. கிறிஷாந்தி சந்ரசேகர்		

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு
புரட்டாசி - ஐப்பசி	**கிறிஸ்தவ வரலாறு - II** புரட்டாசி 21-24 குத்தீன் மனோகர் **திருச்சபையியலும் இறுதியியலும்** **ஐப்பசி** 5-8 கிறிஸ்துமணி செல்லையா	**ஊழியத்திற்கான தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய உருவாக்கம்** புரட்டாசி 7-10 ஜெயசீலன் ஜோயல் டிரோன் **வேதாகம சமாதானப்பணி** **ஐப்பசி** 19-22 ஜேசன் செல்வராஜா	**பழைய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல்** புரட்டாசி 7-10 வி. கிறிஷாந்தி சந்ரசேகர் **யாக்கோபு நிருபம்** **ஐப்பசி** 5-8 காமினி ஜயந்த
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **வேதாகம அறநெறி** வியாழன் பி.ப.3:00-பி.ப.5:20 13 வாரங்கள் ஆரம்பம்: புரட்டாசி 9 இரா. ஹரிஹரன்		

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

	யாழ்ப்பாணம்	வவுனியா	மட்டக்களப்பு
கார்த்திகை - மார்கழி	**மாற்கு சுவிசேஷம்** கார்த்திகை 2-5 சிவராஜசிங்கம் ஜெயராஜ் **வேதாகம சமாதானப்பணி** **மார்கழி** 7-10 ஜேசன் செல்வராஜா	**பழைய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல்** கார்த்திகை 9-12 வி. கிறிஷாந்தி சந்ரசேகர் **திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்** **மார்கழி** 7-10 சிவராஜசிங்கம் ஜெயராஜ்	**ஆசிய கிறிஸ்தவ வரலாறு** கார்த்திகை 2-5 தனராஜ் அஜேந்திரன் **பிரதான மதங்கள்** **மார்கழி** 7-10 இரா. ஹரிஹரன்
வாராந்திர பாடநெறி	**பல்வளாக பாடநெறி** **வேதாகம அறநெறி** வியாழன் பி.ப.3:00-பி.ப.5:20 13 வாரங்கள் ஆரம்பம்: புரட்டாசி 9 இரா. ஹரிஹரன்		

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க இயலாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் பாடநெறிக்குரிய குறித்த மாகாண கல்வி நிலைய காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பாடநெறி விவரணம்
நேர்நிலை கற்றல்

வேதாகம இறையியல்
திறமை அளவு: 2

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் பிரதான இறையியல் போதனைகளை இப்பாடநெறி உள்ளடக்கியுள்ளது. தேவன் யார் என்பதையும், சிருஷ்டிப்பு முதல் புதிய சிருஷ்டிப்பு வரை அவர் தம்முடைய மீட்பின் திட்டத்தை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதையும் ஆழமாக அறிவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது.

கிறிஸ்தவ வரலாறு - II
(கி.பி. 1517 - கி.பி. 1900)
திறமை அளவு: 2

சீர்திருத்தம் முதல் (1517) நவீன திருத்தூதுப்பணி இயக்கங்கள் (1900) வரையிலான காலகட்டத்தில் மேற்கத்தேய திருச்சபை வரலாற்றின் மாபெரும் சீர்திருத்தவாதிகள், மதிநுட்பமுள்ள இறையியலாளர்கள், பெருங்கூட்ட சுவிசேஷகர்கள், உலக தூதுப்பணி இயக்கங்கள் ஆகியவர்களால் திருச்சபையில் ஏற்பட்ட பரம்பல், தாக்கங்களை இப்பாடநெறியானது ஆராய்வதோடு, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய பாடங்களினூடாக ஆரோக்கியமான திருச்சபை வாழ்வை நோக்கி வழிகாட்டுகிறது.

புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
திறமை அளவு: 2

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையை இப்பாடநெறி விளக்குகிறது. ஒவ்வொரு புத்தகத்தினுடைய எழுத்தாளர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருள்கள், சரித்திர பின்னணி மற்றும் தனித்துவங்களை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள இப்பாடநெறியானது துணை புரியும்.

வேதாகம விளக்கவுரை
திறமை அளவு: 2

ஒவ்வொரு சந்ததியிற்கும் நிரந்தரமான தேவனின் சத்திய வார்த்தையான வேதாகமத்தை சரியான விதத்தில் கையாள்வதற்கான நெறிமுறைகளை இப்பாடநெறி பயிற்றுவிக்கிறது. வேதாகமத்தில் உள்ள கவிதை, தீர்க்கதரிசனம், சரித்திரம் மற்றும் நியாயப்பிரமாணம் போன்ற பல்வேறு இலக்கிய நடைகளை புரிந்து கொள்வதற்கான கோட்பாடுகளை இப்பாடநெறியானது மாணவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

திறமை அளவு: 2

வேதாகமத்தில் பரிசுத்த ஆவியானவர் குறித்தும், வரலாற்று ரீதியாக ஆவியானவர் பற்றிய கோட்பாடுகள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதையும் இப்பாடநெறி விளக்குகிறது. மேலும் விசுவாசியின் வாழ்விலும் திருச்சபையிலும் ஆவியானவரின் தனித்துவமான செயற்பாட்டையும் வல்லமையுள்ள பிரசன்னத்தையும் புரிந்துகொள்வதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது.

தலைமைத்துவம்

திறமை அளவு: 2

வேதாகம அடிப்படையிலான தலைமைத்துவ கோட்பாடுகளை இனங்கண்டு கொள்ள இப்பாடநெறியானது உதவுகிறது. இதன் மூலமாக தலைமைத்துவ பண்புகளை வளர்த்து ஊழியம், அலுவலகம் மற்றும் குடும்ப சூழல்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சிறந்த தலைவராக மிளிர்வதற்கு இப்பாடநெறியில் கற்கிற மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

புதிய ஏற்பாட்டிற்கான பின்னணி

திறமை அளவு: 2

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட காலகட்டத்தின் சுவாரஸ்யமான சம்பவங்களையும், விசேடமான நபர்களையும் இப்பாடநெறி ஆராய்கிறது. கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் உலகத்தினை உருவாக்கிய தனித்துவமான சம்பவங்கள், யூத மதத்தின் தன்மை மற்றும் முக்கிய இயக்கங்கள், பாலஸ்தீன, உரோம சாம்ராஜ்யத்தின் கலாச்சார பின்னணியை அறிய இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது.

வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்

திறமை அளவு: 2

எமது ஜெப வாழ்விற்கான சிறந்த முன்மாதிரி இயேசு கிறிஸ்து ஆவார். இப்பாடநெறியானது இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கையையும் வேதாகமத்திலுள்ள தேவ மனுஷர்களின் ஜெபங்களையும் மையப்படுத்தி ஆராய்கிறது. நாம் எவ்வாறு, எதற்காக, ஜெபிக்க வேண்டும் என்பதையும், பிறரை ஜெபத்தில் வழிநடத்துவதற்கான வேதாகம கோட்பாடுகளையும் இப்பாடநெறியானது கற்பிக்கிறது.

இலங்கை திருச்சபை வரலாறு

திறமை அளவு: 2

இலங்கையில் கிறிஸ்தவ மரபுரிமையின் வரலாற்றையும் அதன் ஆரம்ப கால கட்டங்களையும் இப்பாடநெறியானது அறிமுகப்படுத்துகிறது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் மற்றும் அமெரிக்க திருத்தூதுப்பணியாளர்களின் பங்களிப்பையும் தற்கால இலங்கையிலுள்ள திருச்சபைகளின் தோற்றத்தையும் புரிந்துகொள்ள இப்பாடநெறியானது உதவுகிறது.

கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

திறமை அளவு: 2

"உலக நோக்கு என்பது நாம் பார்க்கும் பார்வையல்ல, அதனூடாக பார்க்கும் பார்வை கண்ணாடி" (போல் ஹிபேர்ட்). கிறிஸ்தவ சிந்தனைகளின் வழியே நமது எண்ணங்கள் மற்றும் மனப்பான்மைகளை சீர்தூக்கி பார்க்கவும், உலகியல் போக்குகளுக்கு அப்பாற்பட்டு ஆழமான வாழ்வியல் மாற்றத்தையும் சரியான முடிவுகளையும் பெறுவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களை தயார்படுத்துகிறது.

கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

திறமை அளவு: 2

கிறிஸ்துவின் தெய்வீக, மானிட தன்மைகள் குறித்தும் மற்றும் பிதாவுடனான தொடர்பை குறித்தும் இப்பாடநெறி ஆராய்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் வெளிப்படும் கிறிஸ்துவின் மீட்பின் செயல்பாடுகளையும், விசுவாசியின் வாழ்விலும் திருச்சபையிலும் அவரது பங்களிப்பையும் இப்பாடநெறிக்கூடாக மாணவர்கள் விளங்கிக்கொள்வர்.

திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்

திறமை அளவு: 2

"திருத்தூதுப்பணி" எனும் வார்த்தையை அனைத்து கிறிஸ்தவர்களும் அறிந்திருந்தாலும், அதை குறித்த சரியான தெளிவின்மை இன்றும் காணப்படுகிறது. தேவனின் திருத்தூதுப்பணியின் வேதாகம மற்றும் வரலாற்று பின்னணியை இப்பாடநெறியானது விரிவாக ஆராய்கிறது. மேலும் தற்கால சவால்களுக்கு மத்தியில் தேவனுடைய ஊழியத்தை முன்னெடுப்பதில் தனிநபரும் திருச்சபையும் ஆற்ற வேண்டிய தனித்துவமான பங்களிப்பை அறிவதற்கு மாணவர்களுக்கு உதவுகிறது.

வாலிபர் ஊழியம்

திறமை அளவு: 2

உலகமயமாக்கல் சூழலில் வாலிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அவர்களின் ஆற்றல்களையும் இப்பாடநெறி மையப்படுத்துகிறது. 14 முதல் 21 வயதுடைய வாலிபர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவித்து, அவர்களை சீஷத்துவ பாதையில் வழிநடத்தி, அவர்களின் ஆற்றலை சமூதாய மாற்றத்திற்கு பயன்படுத்துவதற்கு மாணவர்களை தயார்படுத்துகிறது.

வேதாகமத்தை கற்கும் முறைகள்

திறமை அளவு: 2

வேதாகமத்தை சுயமாக கற்றுக்கொள்வதற்கும் சரியான முறைகளில் வியாக்கியானம் செய்வதற்கும் தேவையான ஆற்றலை இப்பாடநெறியானது தருகிறது. பல்வேறு வகையான வேதாகம கற்கை முறைகளின் வழியே வேதாகமத்தை சுயமாக ஆராய்ந்து அதன் சத்தியங்களை வாழ்க்கையில் சரியாக பிரயோகிப்பதற்கு இப்பாடநெறியானது கற்பிக்கிறது. .

கிறிஸ்தவ வரலாறு - III
(19-ம், 20-ம் நூற்றாண்டுகள்)

திறமை அளவு: 2

1800ஆம் ஆண்டு முதல் இன்று வரையிலான காலப்பகுதியில் திருச்சபையின் செயற்பாடுகளையும் வளர்ச்சியையும் இப்பாடநெறி ஆராய்கிறது. மேலும், சரித்திரத்தில் திருச்சபை கண்ட வெற்றிகள், சவால்கள் மற்றும் தேவனின் செயற்பாடுகளை புரிந்துகொண்டு ஆவிக்குரிய பாடங்களை கற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு உதவுகிறது.

உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்

திறமை அளவு: 2

ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்திருக்கும் தலைமைத்துவ திறன்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுப்பதற்கு இப்பாடநெறி உதவுகிறது. தலைமைத்துவ பண்புகள், தரிசனம், ஒழுக்கம், சவால்கள் மற்றும் முரண்பாடுகளை கையாளும் முறைகளை கற்பித்து திறமையான தலைவராக மிளிர செய்வதற்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது.

வேதாகமத்தை குறித்த கண்ணோட்டங்கள்

திறமை அளவு: 2

தற்காலத்தில் வேதாகமத்தின் நம்பகத்தன்மை குறித்தெழும் சந்தேகங்கள் மற்றும் சர்ச்சைகளை இப்பாடநெறி ஆராய்கிறது. தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தின் மீதுள்ள நமது விசுவாசத்தை பலப்படுத்திக்கொள்ளவும், அதன் நம்பகத்தன்மையை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கவும் இப்பாடநெறியானது உதவுகிறது

பிரதான மதங்கள்

திறமை அளவு: 2

இப்பாடநெறியானது இலங்கையிலுள்ள பிரதான மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம் மதங்களின் கோட்பாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், இலங்கை கலாச்சாரத்தில் அவர்களது தனித்துவமான பங்களிப்பு உள்ளிட்ட அனைத்தையும் ஆராய்ந்து, பன்மத சூழலில் நல்லிணக்கத்தையும் பரஸ்பர மரியாதையும் மேம்படுத்துவதற்கூடாக பிற மதம் சார்ந்த உங்கள் நண்பர்கள், அயலவர்களுக்கு பொருத்தமான விதத்தில் நற்செய்தியை பகிர்ந்து கொள்வதற்கு பயிற்றுவிக்கிறது.

மாற்கு சுவிசேஷம்

திறமை அளவு: 2

கிறிஸ்துவை பற்றியும் அவரது செயற்பாடுகள் பற்றியும் கற்றுக்கொள்வதற்கு மாற்கு சுவிசேஷம் மிகவும் முக்கியமான நூலாகும். இயேசுவை தேவனுடைய குமாரனாகவும், இரட்சகராகவும், இலக்குடன் விரைந்து செயற்படும் தலைவராகவும் இந்நூல் சித்தரித்து காண்பிக்கிறது. இப்பாடநெறியானது கிறிஸ்தவ விசுவாசத்தை வலுப்படுத்தி, மாணவர்களை செயற்படுத்த தயார்படுத்துகிறது.

தேவனும் உலகமும்

திறமை அளவு: 2

இப்பாடநெறியானது சமகால வாதங்கள், கிறிஸ்தவ சிந்தனையின் வரலாறு ஆகியவற்றை கிறிஸ்தவ அடிப்படையின் வெளிச்சத்தில் ஆராய்கிறதுடன் முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஆய்விற்கான அறிமுகமாகவும் காணப்படுகிறது. ஆண்டவருடைய குணாதிசயங்களும் அவருடைய தன்மைகளும், உலகம், மனிதனின் படைப்பு மற்றும் வீழ்ச்சி ஆகிய முக்கிய கருப்பொருள்களை வேதாகமத்தின் அடிப்படையில் புரிந்துகொள்ளும் ஓர் இறையியல் முயற்சியாகும்.

புதிய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல்

திறமை அளவு: 2

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிற்கிடையிலான நீண்டகாலப்பகுதியின் வரலாற்று சம்பவங்களையும், இயக்கங்களையும் இப்பாடநெறி விளக்குகிறது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் வாழ்ந்த உலகத்தின் கலாச்சார பின்னணியை ஆராய்வதோடு, மாணவர்களுக்கு புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ள புத்தகங்களும் அறிமுகப்படுத்தப்படும்.

பிரசங்க பயிற்சி

திறமை அளவு: 2

கூட்டு ஆராதனையில் பிரசங்கம் வகிக்கும் பிரதான இடத்தை மையப்படுத்தி இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையை மாற்றக்கூடிய உற்சாகமான பிரசங்கங்களை உருவாக்கும் மூலோபாயங்களை கற்றுக்கொண்டு, தேவனுடைய வார்த்தையை தாக்கமுள்ள விதத்தில் பகிர்வதற்கு இப்பாடநெறியானது உதவுகிறது.

துர்உபதேசங்கள்

திறமை அளவு: 2

வேதாகம அடிப்படை சத்தியங்களை புரட்டுகின்ற தவறான உபதேசக்குழுக்களின் போதனைகளையும் அணுகுமுறைகளையும் இப்பாடநெறி ஆராய்கிறது. தவறான போதனைகளிலிருந்து விசுவாசிகளை பாதுகாத்து, வேதாகம சத்தியத்தின் அடிப்படையில் அவர்களை நேர்த்தியாக வழிநடத்துவதற்கு இப்பாடநெறியானது பயிற்றுவிக்கிறது.

இறையியலுக்கான அறிமுகம்

கிறிஸ்தவ அடிப்படை விசுவாச கோட்பாடுகள் திறமை அளவு: 2

கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை கோட்பாடுகளை இப்பாடநெறியானது தெளிவான முறையில் அறிமுகப்படுத்துகிறது. நமது விசுவாசத்தை ஆழமாக புரிந்துகொண்டு, பிறருக்கு அதனை தெளிவுடனும் நம்பிக்கையுடனும் பகிர்ந்துகொள்வதற்கு இப்பாடநெறி வழிகாட்டுகிறது.

மத்தேயு எழுதிய நற்செய்தி நூல் திறமை அளவு: 2

மத்தேயு சுவிசேஷத்தின் இலக்கிய நடை, வடிவமைப்பு மற்றும் மையக்கருப்பொருள்களை இப்பாடநெறி ஆராய்கிறது. தேவனுடைய இராஜ்யம், மலைப்பிரசங்கம், இயேசுவின் போதனைகள் மற்றும் உவமைகளை ஆழமாக பகுப்பாய்வு செய்வதற்கு இப்பாடநெறியானது துணைபுரிகிறது.

கிறிஸ்தவ வரலாறு - I

(கி.பி. 100 - கி.பி. 1517) திறமை அளவு: 2

திருச்சபையின் ஆரம்ப காலம் முதல் சீர்திருத்த காலம் வரையிலான வரலாற்று சம்பவங்களை இப்பாடநெறி கற்பிக்கிறது. திருச்சபை பிதாக்கள், இரத்தசாட்சிகள், துறவிகள், அருட்பணியாளர்கள், கிறிஸ்தவ இயக்கங்கள், இறையியல்கள் வழியாக திருச்சபை வளர்ச்சியடைந்த வரலாற்றை இப்பாடநெறியினூடாக மாணவர்கள் அறிந்துகொள்வர்.

ஊழியத்திற்கான தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய உருவாக்கம் திறமை அளவு: 2

வினைத்திறனான ஊழியத்திற்கும் தேவ பக்தியுடன் வாழ்வதற்கும் தனிப்பட்ட ஆவிக்குரிய உருவாக்கம் இன்றியமையாததாகும். இப்பாடநெறியானது மாணவரை திருச்சபைக்குள் திறம்பட ஊழியம் செய்வதற்காக, சுய பிரதிபலிப்பு மற்றும் ஆவிக்குரிய பயணத்தின் வழியே, தம்மை கடவுள் மற்றும் பிறருடனான உறவை புரிந்துகொள்வதில் ஆன்மீக வளர்ச்சியை அடைய வழிகாட்டுகிறதுடன், இந்த அனுபவத்தின் ஒரு பகுதியாக சிறுகுழு கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

பழைய ஏற்பாட்டை அறிந்துகொள்ளுதல் திறமை அளவு: 2

பழைய ஏற்பாட்டின் வரலாறு, பண்பாடு மற்றும் இறையியல் கருப்பொருள்களை இப்பாடநெறி ஆழமாக ஆராய்கிறது. இஸ்ரவேலரின் பயணம் மற்றும் வேதாகம இலக்கிய நடைகளை கற்று பழைய ஏற்பாடு எவ்வாறு புதிய ஏற்பாட்டிற்கும் கிறிஸ்தவ வாழ்விற்கும் அடித்தளமாக அமைகிறது என்பதை மாணவர்கள் இப்பாடநெறிக்கூடாக பரிந்துகொள்வர்.

திருச்சபையியலும் இறுதியியலும்

திறமை அளவு: 2

திருச்சபை, என்பதன் இறையியல் முக்கியத்துவத்தையும் இறுதிக்காலம் குறித்த வேதாகம போதனைகளையும் இப்பாடநெறியானது விரிவாக ஆராய்கிறது. பாரம்பரியங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளுக்கப்பால் திருச்சபையின் உண்மையான அழைப்பை உணரவும், உள்ளூர் திருச்சபையுடனான ஐக்கியத்தை ஆழப்படுத்தி தேவ ஊழியத்தில் இணைந்து செயற்படவும் இப்பாடநெறியானது உதவுகிறது.

யாக்கோபு நிருபம்

திறமை அளவு: 2

அளவில் சிறிதான இந்நிருபம் நடைமுறை வாழ்வியல் சவால்களை குறித்த ஆழமான பார்வையை வழங்குகிறது. மெய்யான தேவபக்தி, விசுவாசம் மற்றும் ஞானத்துடன் கூடிய கிறிஸ்தவ வாழ்வை தனிப்பட்ட வாழ்விலும், திருச்சபை ஊழியத்திலும் வெளிப்படுத்தவும் ஆவிக்குரிய முதிர்ச்சியோடு மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கவும் இப்பாடநெறியானது மாணவர்களை ஆயத்தப்படுத்துகிறது.

வேதாகம சமாதானப்பணி

திறமை அளவு: 2

மனிதர்களுக்கிடையிலும், தேசிய, உலகளாவிய தளங்களிலும் ஏற்படும் முரண்பாடுகளை வேதாகம கண்ணோட்டத்தில் எதிர்கொள்வதற்கு இப்பாடநெறி வழிகாட்டுகிறது. முரண்பாடுகளின் மூலங்களை ஆராய்ந்து, சமாதானத்தை உருவாக்குவதற்கும் மன்னிப்பை முன்னெடுப்பதற்கும் தேவையான வேதாகம உத்திகளை கற்பித்து மாணவர்களை அனைத்து தளங்களிலும் செயல்திறனுள்ளவர்களாக செயற்படுவதற்கு இப்பாடநெறியானது தயார் செய்கிறது.

ஆசிய கிறிஸ்தவ வரலாறு

திறமை அளவு: 2

ஆசிய கண்டத்திலும் நமது உள்ளூர் சூழலிலும் தேவன் ஆற்றிய கிரியைகளையும் திருச்சபையின் வரலாற்றையும் இப்பாடநெறி ஆராய்கிறது. ஆசிய சூழலுக்கு பொருத்தமான முறையிலும் நம்பகத்தன்மையுடனும் நற்செய்தியையும் ஊழியத்தையும் முன்னெடுப்பதற்கான வரலாற்று பின்னணியை அறிவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

ரோமருக்கு எழுதிய நிருபம்

திறமை அளவு: 2

ரோமருக்கு எழுதிய நிருபம் அகஸ்டீன், மார்ட்டின் லூத்தர், ஜோன் வெஸ்லி, கார்ள் பார்த் போன்றவர்களின் வாழ்க்கையில் ஆழமான மாற்றங்களை உருவாக்கியது. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க நிருபத்தின் வழியே தேவனின் மீட்புத்திட்டம், சிலுவையின் நீதி, தேவ அன்பினை புரிந்துகொண்டு நமது அன்றாட வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ்வதற்கு இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள்

திறமை அளவு: 2

பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் என அழைக்கப்படும் இப்புத்தமானது ஆதி திருச்சபையின் அநேக வருட வரலாற்று சம்பவங்களை உள்ளடக்கிய புதிய ஏற்பாட்டின் பொக்கிஷமான நூலாகும். "கிறிஸ்தவர்கள்" எனும் அடையாளம், திருச்சபை சங்கம், அப்போஸ்தலரின் செயற்பாடுகள், திருத்தூதுப்பணியின் பரம்பல் ஆகியவற்றுடன், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் திருச்சபை எவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டு உலகம் எங்கும் விரிவடைந்தது என்பதை புரிந்துகொள்ள இப்பாடநெறி வழிகாட்டுகிறது.

இறையியல் பட்டப்படிப்பிற்கான கருத்தரங்கு பல்வளாக பாடநெறி

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுமாணி பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இறையியல் இளமாணி பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்

BTh கட்டாயம்

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: தை 12

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
ஜூலியன் தேவதாசன்

கிறிஸ்தவ வரலாற்றில் தோற்றம் பெற்ற பல்வேறு இறையியல் கோட்பாடுகளின் தோற்றம், பின்னணி, வளர்ச்சி, அதன் இறையியலாளர்கள் மற்றும் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை இப்பாடநெறி ஆராய்கிறது. இவ்வுட்பிரிவுகளின் இறையியல் அடிப்படைகளை புரிந்துகொண்டு, இன்றைய திருச்சபையில் அவை ஏற்படுத்தும் பலம் மற்றும் பலவீனங்களை மதிப்பிடுவதற்கு இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உதவி செய்கிறது.

பல்வளாக பாடநெறிகள்

ஆவிக்குரிய வரங்கள்

விருப்பு

ஆவிக்குரிய வரங்களை குறித்த வேதாகம சத்தியங்கள், விளக்கங்கள் மற்றும் அவற்றின் பிரயோகங்களை இப்பாடநெறி ஆராய்கிறது. உங்கள் தனிப்பட்ட ஆவிக்குரிய வரங்களை அடையாளம் கண்டு, கிறிஸ்துவிற்காக வல்லமையுடன் பணியாற்றி பிரகாசிப்பதற்கு இப்பாடநெறியானது உதவி செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: தை 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
காமினி ஜயந்த

திருமணத்திற்கு தயாராவோருக்கான உதவி ஆலோசனைகள்

விருப்பு

தற்கால குடும்ப அழுத்தங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் உறுதியான கிறிஸ்தவ திருமண வாழ்வை கட்டியெழுப்புவதற்கு இப்பாடநெறியானது வழிகாட்டுகிறது. திருமணத்திற்கு ஆயத்தமாவோருக்கு உதவவும், அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி பயிற்சியளிக்க விரும்புவோருக்கும் இப்பாடநெறி உதவியாக அமைகிறது.

12 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: சித்திரை 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
வி. கிறிஷாந்தி சந்ரசேகர்

வேதாகம அறநெறி

கட்டாயம்

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் குணாதிசயத்தை பிரதிபலித்து உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழ அழைக்கப்பட்டவர்கள். இப்பாடநெறியானது அறநெறி சார்ந்த நடைமுறை கேள்விகளை ஆராய்ந்து, வேதாகம அறநெறி கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்க்கையின் ஒவ்வொரு தெரிவுகளையும் செயல்களையும் இன்றைய கால நடைமுறை வாழ்க்கையில் பிரயோகித்து கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்கு வழிகாட்டியாக அமையும்.

13 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:20

ஆரம்பம்: புரட்டாசி 9

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
இரா. ஹரிஹரன்

விரிவுரையாளர் விபரங்கள்



இரா. ஹரிஹரன், BTh, MMin

கொழும்பு இறையியல் கல்லூரியின் மாகாண கல்வி நிலையங்களின் முகாமையாளரான இவர், சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றவருமாவார். மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



ஜூலியன் தேவதாசன், BTh, MDiv, MTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான இவர், இலங்கையின் தெற்காசிய இறையியல் நிறுவனம் (SAIT), தென்கொரியாவின் இறையியல் கற்கைகள் மற்றும் திருத்தூதுப்பணிக்கான ஆசிய மையம் (ACTS), தென்னாபிரிக்காவின் தென்னாபிரிக்க இறையியல் கல்லூரி ஆகியவற்றின் பட்டதாரியாவார். இவர் கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) விழிப்புணர்வு பேச்சாளராகவும், தென்னாபிரிக்காவின் ACRP- CPSC அங்கீகாரம் கொண்ட கிறிஸ்தவ மேய்ப்பத்துவ பணியில் சமயம்சார் நிபுணராகவும், ஹகாய் நிறுவனத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளராகவும், இலங்கை திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட கிறிஸ்தவ கல்வி சபையின் வளவாளராகவும் சேவையாற்றி வருகிறார். இவர் சிலாபம், புனித யாக்கோபின் திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



வனஜா ராஜ்குமார், BTh, MChS


கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரான இவர், கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், இறையியலுக்கான தமிழ்மொழி செம்மையாளராகவும் பணியாற்றுகிறார். பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



தனராஜ் அஜேந்திரன், BTh, MA

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், கடந்த 13 வருடங்களாக வெள்ளவத்தை கிளையில் ஆரம்ப பணியில் ஈடுபட்டவருமாவார். திருச்சபை ஸ்தாபித்தல், சீஷத்துவம், வாலிபருக்கான பயிற்சி மற்றும் இறையியல் கல்லூரிகளில் கற்பித்தல் பணிகளில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

விரிவுரையாளர் விபரங்கள்



காமினி ஜயந்த, BTh, MSW

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Infinity Centre for Higher Studies (இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார். Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church இனை தனது ஆராதிக்கும் திருச்சபையாகவும் கொண்டுள்ளதுடன் அதன் உதவி போதகராகவும் ஊழியமாற்றி வருகிறார்.



சந்ரசேகரம் ரொஷான் க்ளவன்ஸ், BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், திருச்சபைகளை நிறுவும் ஊழியத்திலும், சீஷர்களை உருவாக்குவதிலும் மற்றும் அருட்பணியிலும் ஈடுபட்டு வருகின்றார். இறக்குவானை கிறிஸ்தவ எழுப்புதல் திருச்சபையின் தலைமை போதகராக ஊழியம் செய்வதோடு சப்ரஹமுவ போதகர் ஒன்றியத்தின் செயலாளராகவும் சேவையாற்றி வருகிறார்.



கிறிஸ்துமணி செல்லையா, DipEng (Mech), BTh, MA, MDiv

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், திருச்சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றி உள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை திருச்சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



வி. கிறிஷாந்தி சந்ரசேகர், Dip (Counselling), HND (Counselling), BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் டிப்ளோமா மற்றும் Chamber of Psychology and Counsellingஇல் உயர் தேசிய டிப்ளோமா (HND) பட்டங்களை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

விரிவுரையாளர் விபரங்கள்



கிறிஸ்ரி பாலேந்திரன், Certificate in Counselling CWR-UK, BD

இவர் சேரம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



ஜோன் பெனடிக்ட், BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கொழும்பிலுள்ள Word God Ministries திருச்சபையின் தலைமை போதகராகவும், வேதாகம கல்வி ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். அனேக திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் பணிகளில் ஈடுபடுவதுடன், பதின்ம வயதினர் மற்றும் வாலிபர்கள் மத்தியிலும் பணியாற்றி வருகிறார்.



மகேஸ்வரன் மாணிக்கராஜா, BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



ஜெயசீலன் ஜோயல் டிரோன், BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியார் பெருநிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாக துறையில் தொழில் புரிந்தவர். பின்னர் ஐந்து வருடங்கள் கொழும்பு சுவிசேஷ கூடார சபையின் வாலிபர் ஐக்கியத்தின் தலைவராகவும் போதகர் குழுவின் அங்கத்தவராகவும் பணி புரிந்துள்ளார். பின்னர் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிறிஸ்துவின் ஜெபவீடு திருச்சபையின் உதவிப்போதகராக பணியாற்றி, தற்போது கொழும்பு சுவிசேஷ கூடார சபை, திருகோணமலை போதகராக பணியாற்றுகிறார்.



ஜேசன் செல்வராஜா, BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் முன்னாள் கல்விப்பீட உறுப்பினரான இவர், AOG கைதடி சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகராகவும் சேவையாற்றுகிறார். அத்துடன் "Simply mobilizing SL" இன் தேசிய இணைப்புக்குழுவின் அங்கத்தவராகவும், சிவில் உரிமை அமைப்பாகிய யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அங்கத்தவருமாவார்.

விரிவுரையாளர் விபரங்கள்



சிவராஜசிங்கம் ஜெயராஜ், BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கிறிஸ்துவுக்காக இளைஞர் பணியில் 26 வருட பணி அனுபவத்தோடு பல புதிய பிரதேசங்களில் ஊழியங்களை ஆரம்பிக்க தேவனால் தற்போது வரை பயன்படுத்தபடுகின்ற பாத்திரம் ஆவார். தற்போது இலங்கை சிறைச்சாலைகள் ஐக்கிய ஊழியத்தின் தேசிய இயக்குனராக பணியாற்றுகிறார். இவர் மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



குத்தீன் மனோகர், BTh, MDiv

42 வருடங்களாக கிருபை சுவிசேஷ சபையின் போதகராக பணியாற்றி வரும் இவர், பால்டேயஸ் இறையியல் கல்லூரியின் முன்னாள் அதிபரும், இலங்கை வேதாகம கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளரும், சபை சரித்திரம், சபை ஆட்சியமைப்பு மற்றும் கருவறை கொலைகள் ஆகிய புத்தகங்களின் ஆசிரியருமாவார்.



அரிதாஸ் தேவானந், BTh, MCS

கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியும், யாழ் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவக்கல்வியில் முதுமாணி பட்டதாரியுமான இவர், கிறிஸ்துவுக்கான வாலிபர் இயக்கத்தின் பிராந்திய தலைவராக பணியாற்றி வருகிறார். வாலிபர் மத்தியில் கற்பித்தல், ஆற்றுப்பணிகளில் ஈடுபட்டு வரும் இவர் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



யோகநாதன் பகீரதன், BA (Hons), MA

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்கள் ஐக்கியத்துடன் (FOCUS) இணைந்து பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்கள் மத்தியில் பணியாற்றி வருகிறார். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சீயோன் திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



ஜெயவீரசிங்கம் ஜேக்கப் சுகுணரூபன், BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் நீண்ட காலமாக இறை பணியில் ஈடுபட்டு வருகிறார். தற்போது மட்டக்களப்பில் உள்ள ஜீவ வாழ்வு ஊழியத்தின் தலைமை போதகராக பணியாற்றுவதோடு, ஏனைய திருச்சபைகளிலும், வேதாகம பாடசாலைகளிலும் கற்பித்தல் நடவடிக்கைகளில் அனுபவம் உடையவராகவும் இருக்கின்றார். மனித உரிமைகள் சம்பந்தமான பணிகளில் ஈடுபாடுள்ள இவர் அத்துறையில் பயிற்றுவிக்கப்பட்டவருமாவார்.

விரிவுரையாளர் விபரங்கள்



நிரன்ஜலா சகாயரட்ணம், BA, MDiv

இலங்கை வேதாகம கல்லூரியில் தனது இறையியல் முதுமாணி பட்டத்தை பெற்றுள்ளதுடன், கடந்த பதினைந்து வருடங்களாக இலங்கையின் பல பிரதேசங்களிலும் இறையியல் கல்லூரிகளில் கற்பித்தல் பணியை செய்து வருகிறார். நாரஹேன்பிட்டி மக்கள் தேவசபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்ட இவர் திருச்சபையின் சீஷத்துவ ஊழியத்திலும் பிற ஊழியங்களிலும் நீண்டகாலமாக சேவையாற்றி வருகின்றார்.



ம. தர்ஷன், BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், யாழ் கல்வி நிலையத்தின் நிர்வாக இணைப்பாளராக பணியாற்றி வருகிறார். சரசாலை, தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ள இவர், அதன் போதகராக சேவையாற்றுவதுடன், வாலிபர்கள் மத்தியில் தேவ பணியை மேற்கொண்டும் வருகிறார்.

CTS கற்கைத்திட்டங்கள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு கற்கைத்திட்டத்திற்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி நான்கு மட்டங்களில் கற்கைத்திட்டங்களை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய பாடநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21-ம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
தேவைப்படும் திறமை அளவுகள் : 36

இறையியலில் டிப்ளோமா (DipTh)
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
தேவைப்படும் திறமை அளவுகள்: 72

இறையியலில் இளமாணி (BTh)
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
தேவைப்படும் திறமை அளவுகள்: 120

மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:
கல்விசார் காரியாலயம் 011-2890809; extensions@cts.lk

கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
சிறுவர் ஊழிய களம்

பாடநெறிகள்:

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  - ஒவ்வொரு திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை மாலை 6.00 முதல் மாலை 9.00 வரை
- ஒவ்வொரு திறமை அளவும் 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

	பாடங்கள்	திறமை அளவு
கட்டாய பாடங்கள் வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் சிறுவர் ஊழிய பாடங்கள்	 04 04	 08 08
விருப்புப்பாடங்கள்	10	20
கருத்தரங்குகள்	04	00
மொத்தம்	22	36

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

பாடநெறிகள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:

நிகழ்நிலை: பாடநெறிகள் Zoom வழியாக நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணைய வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:

திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க
ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
+94 764823127
cm@cts.lk

கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
சிறுவர் ஊழிய களம்

கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்
சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்
பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

விருப்புப்பாடங்கள்
துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

கிறிஸ்துவில் ஐக்கிய வாழ்வு

















189 துட்டுகெமுணு வீதி, கொஹுவலை
(+94) 11 2890809 | student.services@cts.lk | www.cts.lk